05.12.2016

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் கடும் வறட்சியால் கருகும் கரும்பு பயிர்கள் விவசாயிகள் கவலை



பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் கடும் வறட்சியால் கரும்பு பயிர்கள் கருகி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>கடும் வறட்சி</u>

தர்மபுரி மாவட்டத்தில் பருவமழை பொய்த்து போய் விட்டது. இதனால் பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் கடும் வறட்சியால் ஏரி , குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகள் தண்ணீர் இன்றி வறண்டு விட்டன. மேலும் ஆழ்துளை கிணறுகள் போதிய தண்ணீர் இல்லாததால் கரும்பு , நெல் உள்ளிட்ட பயிர்கள் காய்ந்து கருகி வருகிறது. மேலும் மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு , நெல், பூக்கள் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்பட்டு உள்ளன. இந்தாண்டு பருவமழை பொய்த்து போனதால் கிணறுகள், ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறையத்தொடங்கியது. இதனால் பயிர்கள் தண்ணீர் இன்றி காய்ந்து போனது. இதனால் மாவட்டத்தில் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

முன்னுரிமை

மேலும் மானாவாரி பயிரான மக்காச்சோளம், சோளம் உள்ளிட்ட பயிர்கள் காய்ந்து வருகிறது. கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 4.5 லட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படும் என்று ஆலை நிர்வாகம் அறிவித்துள்ள நிலையில் கரும்பு பயிர்கள் காய்ந்து வருவதால் எடை குறைய வாய்ப்பு உள்ளது. எனவே வறட்சியால் காய்ந்து வரும் கரும்பு தோட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வெட்டுவதற்கு ஆலை நிர்வாகம் அனுமதி வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

## பருவமழை பொய்த்து போனதால் காய்ந்து வரும் மானாவாரி பயிர்கள் விவசாயிகள் கவலை



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தாலுகாவில் சத்திரப்பட்டி , விருப்பாட்சி, வீரலப்பட்டி, வேலூர்–அன்னபப்பட்டி, சிந்தலவாடம்பட்டி, பெரியகோட்டை, தாசரிபட்டி, புதுக்கோட்டை, சாமியார்புதூர் ஆகிய பகுதிகளும், தொப்பம்பட்டி ஒன்றியத்தில் தேவத்தூர் , 16–புதூர், கப்பலப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, போடுவார்பட்டி, கள்ளிமந்தையம் ஆகிய பகுதிகளும் உள்ளன. இங்குள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் மானாவாரி நிலங்களில் பருவமழையை நம்பி மக்காச்சோளம் , பருத்தி உள்ளிட்டவற்றை கடந்த மாதம் விவசாயிகள் பயிரிட்டு இருந்தனர்.

இந்த நிலையில் பருவமழை பொய்த்து போனதால் மானாவாரி பயிர்கள் காய்ந்து வருகின்றன. இது குறித்து அப்பகுதி விவசாயிகள் கூறுகையில் , வடகிழக்கு பருவமழை தாமதமாக தொடங்கினாலும் தொடர்ந்து பெய்யும் என்ற நம்பிக்கையில் மானாவாரி பயிர் சாகுபடியில் ஈடுபட்டோம். ஆனால் தற்போது மழை இல்லாததால் பயிர்கள் காய்ந்து வருகின்றன. இதனால் பெரும் நஷ்டம் ஏற்படும் என்பதால் எங்கள் பகுதி விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது என்றனர்.

## குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் கொளிசாளை மீன் விலை வீழ்ச்சி



குளச்சல் மீனவர் வலையில் நேற்று ஏராளமான கொளிசாளை மீன்கள் பிடிப்பட்டதை தொடர்ந்து , விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது.

மீன்பிடி துறைமுகம்

குளச்சல் மீன்பிடி துறைமுகத்தை தங்குதலமாக கொண்டு 300–க்கு மேற்பட்ட விசைபடகுகளும், ஆயிரத்துக்கு மேற்பட்ட நாட்டுப்படகுகளும் மீன்பிடித்து வருகின்றன. நாட்டுப்படகு மீனவர்கள் அதிகாலையில் கடலுக்கு சென்று மீன்பிடித்த பின்னர் மதியம் கரை திரும்புவார்கள். ஆனால், விசைப்படகு மீனவர்கள் ஆழ்கடலில் 10 முதல் 15 நாட்கள் வரை தங்கியிருந்து மீன்பிடித்த பின்னர் கரை திரும்புவார்கள்.

இந்தநிலையில், நேற்று குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் 10–க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரை திரும்பின. அவற்றில் கொளிசாளை , நவரை போன்ற மீன்கள் ஏராளம் சிக்கியிருந்தன. இந்த மீன்களை

பிளாஸ்டிக் பெட்டிகளில் நிரப்பி துறைமுகத்தில் உள்ள ஏலக்கூடத்தில் குவித்து வைத்திருந்தனர்.

விலை வீழ்ச்சி

இந்தநிலையில், பெரும்பாலான வியாபாரிகள் மீன்களை வாங்க ஆர்வம் காட்டவில்லை. இதனால் , மீன்விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. சாதாரணமாக ஒரு பெட்டி ரூ. 500–க்கு விற்பனையாகும் மீன்கள் நேற்று ரூ.250 முதல் ரூ. 300 வரையே விலை போனது.

இதற்கிடையே நேற்று கரைதிரும்பிய விசைபடகுகளில் 7–க்கும் மேற்பட்ட ராட்சத கட்டா கொம்பன் மீன்களும் பிடிபட்டிருந்தன. இந்த மீன்கள் தலா 75 கிலோ முதல் 90 வரை இருந்தன. அவற்றை மீனவர்கள் ஏலம் போட்டு விற்பனை செய்தனர். ஆனால் , மீன்விலை வீழ்ச்சியால் போதிய விலை கிடைக்காமல் மீனவர்கள் கவலை அடைந்தனர்.

## குமரி மாவட்டத்தில் மழை: பெருஞ்சாணி அணை பகுதியில் 60.8 மி.மீட்டர் பதிவு



குமரி மாவட்டத்தில் வட கிழக்கு பருவ மழை பெய்து வருகிறது. ஆனால் பெரிய அளவிலான மழை இன்னமும் பெய்யவில்லை. அவ்வப்போது லேசான மழை பெய்து வருகிறது. நாகர்கோவில் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் வானில் கருமேகங்கள் திரண்டு மழை பெய்வதற்கான அறிகுறிகள் தென்பட்டன. ஆனால் பெய்யவில்லை. இருப்பினும் பேச்சிப்பாறை , பெருஞ்சாணி, சிற்றார் –2, புத்தன்அணை ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக பெருஞ்சாணி அணை பகுதியில் 60.8 மில்லி மீட்டர் மழை பதிவாகியிருந்தது.

நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

பேச்சிப்பாறை–21.4, சிற்றார் 1– 15.6, சிற்றார் 2– 1.2, பொய்கை–8, சுருளோடு–15, கன்னிமார்–1.5, புத்தன்அணை–57.2 என்ற அளவில் மழை பதிவாகியிருந்தது. அணைப்பகுதிகளில் பலத்த மழை பெய்ததால் அணைகளுக்கு தண்ணீர் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. நேற்றைய நிலவரப்படி பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 286 கனஅடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து 328 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதுபோல பெருஞ்சாணி அணைக்கு 117 கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது.

பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 12.75 அடியாகவும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 32 அடியாகவும், சிற்றார் 1 அணையின் நீர்மட்டம் 7.21 அடியாகவும், சிற்றார் 2 அணையின் நீர்மட்டம் 7.31 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 9.40 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 39.29 அடியாகவும் இருந்தது.

## மத்தூர் பகுதியில் சூடுபிடிக்கும் பனங்கிழங்கு வியாபாரம் விவசாயிகள் மகிழ்ச்சி



மத்தூர் பகுதியில் பனங்கிழங்கு வியாபாரம் சூடுபிடித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>பனங்கிழங்கு</u>

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் மற்றும் அதை சுற்றி உள்ள கிராமங்களில் பனைமரங்கள் அதிக அளவில் உள்ளன. கோடை காலமான ஏப்ரல் முதல் ஜூன் வரையில் பனை மரங்களில் நுங்குகள் கிடைக்கும். நுங்குகளுக்காக வெட்டப்படாமல் பனை மரங்களில் விடப்படும் பனங்காய்கள் முதிர்ச்சி அடைந்து ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பனம்பழங்களாக மாறிவிடுகிறது.

நன்கு முதிர்ச்சி அடைந்த பனம்பழங்கள் மரங்களில் இருந்து தானாகவே உதிர்ந்து விடுகின்றன. அவ்வாறு உதிர்ந்து மற்றும் வெட்டப்பட்ட பனம்பழங்களின் விதைகளை மணற்பாங்கான நிலங்களில் புதைத்து வைத்தால் அவை பனை குருத்துகளாக முளைக்க தொடங்கும். அக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரையில் முளைவிடும் குருத்துக்களை தோண்டினால் வேருடன் கூடிய பனங்கிழங்குகள் கிடைக்கின்றன.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

இவ்வாறு பனங்கிழங்கு உற்பத்தி முற்றிலும் இயற்கையாகவே நடப்பதால் மத்தூர் பகுதியில் உள்ள பனங்கிழங்குகளுக்கு பெங்களூரு , சென்னை, வேலூர், திருச்சி, ஓசூர் போன்ற பகுதிகளில் நில்ல விலை கிடைக்கின்றன. மத்தூர் மற்றும் சுற்றி உள்ள ஈச்சங்காடு , மாதம்பதி, ஒட்டப்பட்டி, வெள்ளையம்பதி, சாமல்பட்டி, களர்பதி, கவுண்டனூர் கிராமங்களில் வெட்டி எடுக்கப்படும் பனங்கிழங்குகள் 100, 200 என கட்டுகளாக கட்டப்பட்டு முறையே 150 ரூபாய் மற்றும் 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றன. இந்த பகுதியில் தற்போது பனங்கிழங்கு வியாபாரம் சூடுபிடித்துள்ளது.

இந்த பகுதிகளில் எந்த முதலீடும் இல்லாமல் இயற்கையாக 5 ஆயிரம் முதல் 25 ஆயிரம் கிழங்குகள் வரையில் உற்பத்தி செய்கிறார்கள்.
பருவமழை பொய்த்துபோன இந்த வேளையில் நிலக்கடலை , துவரை, சோளம் ஆகியவை முற்றிலும் கை கொடுக்காத நிலையில் வறட்சியை தாங்கும் பனங்கிழங்கால் அதிக வருவாய் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் பனங்கிழங்குகளை வேக வைத்து உண்ணும்போது பல்வேறு தாது உப்புகளுடன் நார்ச்சத்தும் கூடுதலாக கிடைக்கின்றன. அனைத்து வயதினரும் சாப்பிடக்கூய உணவாக பனங்கிழங்கு உள்ளது என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்துவது குறித்த ஆலோசனை கூட்டம் கலெக்டர் நந்தகுமார் தலைமையில் நடந்தது




பெரம்பலூர் மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்துவது குறித்த ஆலோசனை கூட்டம் கலெக்டர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

ஆலோசனை கூட்டம்

வடகிழக்கு பருவமழை பொய்த்து போனதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை போக்கும் வகையில் பாரத பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதுஇந்த பயிர் காப்பீட்டு . திட்டம் குறித்து விவசாயிகளுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் பெரம்பலூர் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் வேளாண்மை துறையினரால் விவசாயிகளுக்கு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டும், விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்பட்டும் வருகிறது .

பெரம்பலூர் மாவட்டத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்துவது குறித்து வேளாண்மை துறை , வருவாய் துறை , கூட்டுறவு துறை மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை சார்ந்த அலுவலர்களுடனான

ஆலோசனை கூட்டம் மாவட்ட கலெக்டர் நந்த குமார் தலைமையில் மாவட்ட கலெக்டர் அலுவலக பிரதான கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்றது.

பயிர் காப்பீடு

கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் நந்தகுமார் பேசியதாவது -:

பயிர் காப்பீடு செய்யும் விவசாயிகள் 5.12.2016 (நாளை முதல் ( சம்பந்தப்பட்ட வருவாய் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலரிடம் விவசாயிகள் அடங்கல் சான்று . அடங்கல் சான்றுக்கு விண்ணப்பிக்கலாம் கேட்டு விண்ணப்பிக்கும்போது சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் அடங்கல் சான்றில் விவசாயிகளின் அனைத்து விவரங்களையும் பதிவு செய்து 3 படிவங்களாக வழங்க வேண்டும் .3 படிவங்களிலும் கிராம நிர்வாக அலுவலர்கள் கையெழுத்திட்டு அதில் 2 படிவங்களை விவசாயிகளிடம் வழங்க வேண்டும் மீதமுள்ள ஒரு . படிவத்தை கிராம நிர்வாக அலுவலர் அலுவலக நகலாக வைத்து .பராமரிக்க வேண்டும்

பயிர் காப்பீடு செய்யும் ஒரு விவசாயிக்கு ஒருமுறை மட்டுமே கிராம நிர்வாக அலுவலர் மூவிதழ் அடங்கல் சான்றினை வழங்க வேண்டும் . 5.12.2016 முதல் 10.12.2016 வரை கிராம நிர்வாக அலுவலர்கள் தங்கள் அலுவலகத்திலும், 11.12.2016 முதல் 15.12.2016 வரை கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திலும் இருந்து பணியாற்றி விவசாயிகளுக்கு மூவிதழ் அடங்கல் சான்றினை வழங்க வேண்டும்.

முழுஒத்துழைப்பு

அடங்கல் சான்று பெற்றுக்கொண்ட விவசாயிகள் தங்கள் பகுதிக்கு உட்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பயிர் காப்பீடு செய்ய வேண்டும் .விவசாயிகள் பயன்பெறும் வகையில் அமைந்திருக்கும் இத்திட்டத்தை முழுமையாக செயல்படுத்த சம்பந்தப்பட்ட துறைகளின் அலுவலர்கள் முழுஒத்துழைப்பு வழங்க வேண்டும் இவ்வாறு அவர் . .பேசினார்

இக்கூட்டத்தில், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் முத்துக்குமாரசாமி, வருவாய் கோட்டாட்சியர் பேபி, வேளாண்மை இணை இயக்குனர் சந்திரன் , மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜகோபால் மற்றும் வட்டாட்சியர்கள் (வேளாண்மை), வேளாண்மை துறை அலுவலர்கள் , கூட்டுறவு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**வானிலை முன்னறிவிப்பு: தமிழகம், புதுவையில் மழை வாய்ப்பு**

அரபிக் கடலில் மேலடுக்கு சுழற்சி நிலவி வருவதால் தமிழகம், புதுச் சேரியில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளது. இதற்கிடையில் வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஒன்று நேற்று உருவாகியுள்ளது. அதை சென்னை வானிலை ஆய்வு மையம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

தற்போது அரபிக் கடலில் மேலடுக்கு சுழற்சி நிலவி வருகிறது. இதனால் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. இன்றும் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நீர்நிலைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளான செம்பரம்பாக்கம், பூண்டி, சோழவரம் உள்ளிட்டவற்றுக்கு நீர் வரத்து அதிகரித்திருப்பதுடன், நீர் மட்டமும் உயர்ந்து வருகிறது.



கோப்புப் படம்: ஜி.ஞானவேல் முருகன்

இந்நிலையில் தமிழகத்தின் வானிலை நிலவரம் குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் நேற்று கூறியதாவது:

தென்கிழக்கு அரபிக் கடல் மற்றும் அதை ஒட்டிய லட்சத்தீவு பகுதியில், வளிமண்டலத்தில் மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும் தெற்கு அந்தமான் மற்றும் அதை ஒட்டியுள்ள வடக்கு சுமத்ரா தீவு பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது அடுத்து வரும் 24 மணி நேரத்தில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும். அதனைத் தொடர்ந்து வரும் 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேலும் வலுப்பெறக்கூடும். இந்த காற்றழுத்த தாழ்வுநிலையின் வலு மற்றும் போக்கு குறித்து தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்.

அரபிக் கடலில் நிலவி வரும் மேலடுக்கு சுழற்சியால், ஈரப்பதம் மிகுந்த கிழக்கு திசைக் காற்று அரபிக் கடல் நோக்கி வீசுவதால், அடுத்து வரும் 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத் துடன் காணப்படும். நகரின் சில பகுதியில் இடைவெளிவிட்டு லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 31 டிகிரி செல்சியஸாகவும், குறைந்த பட்சம் 24 டிகிரி செல்சியஸாகவும் இருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் திருநெல்வேலி மாவட்டம் சிவகிரியில் அதிகபட்சமாக 6 செ.மீ., நீலகிரி மாவட்டம் குன்னூரில் 5 செ.மீ., சிவகங்கை, நாங்குநேரி, பரமகுடி ஆகிய பகுதிகளில் 4 செ.மீ., சென்னை, தாமரைப்பாக்கம், கோத்தகிரி, குமாரபாளையம், ஸ்ரீபெரும்புதூர் தலா 3 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை காலத்தில் அக்டோபர் 1-ம் தேதி முதல் டிசம்பர் 4-ம் தேதி வரை இயல்பாக 370 மி.மீ. மழை பெய்திருக்க வேண்டும். ஆனால் 129.4 மி.மீ. மழை மட்டுமே பெய்துள்ளது. இது இயல்பை விட 65 சதவீதம் குறைவு.

**தமிழகம், புதுச்சேரியில் இன்றும் மழை வாய்ப்பு: புதிய காற்றழுத்தம் புயலாக மாற வாய்ப்பு - சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்**

லட்சத்தீவு அருகே காற்றழுத்த தாழ்வுப் பகுதி நிலைகொண்டிருப்ப தால் தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்றும் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அந்தமான் கடல் பகுதியில் புதிய காற்ற முத்த தாழ்வு நிலை உருவாகி வருவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுதொடர்பாக செய்தி யாளர்களிடம் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஸ்டெல்லா நேற்று கூறியதாவது:

நேற்று உள் தமிழகத்தில் இருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, மேற்கு நோக்கி நகர்ந்து, லட்சத்தீவு மற்றும் அதை ஒட்டிய பகுதியில் நிலைகொண்டுள்ளது. இதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும். நீலகிரி, கோவை மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழையை

எதிர்பார்க்கலாம். கடலில் கொந்தளிப்பு எதுவும் இருக்காது என்பதால், மீனவர்களுக்கு எச்சரிக்கை விடப்படவில்லை.



கோப்புப் படம்: ஜி.ஞானவேல் முருகன்

சென்னையைப் பொறுத்தவரை வானம் பொதுவாக மேகமூட்டத் துடன் காணப்படும். ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 31 டிகிரி செல்சியஸாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸாகவும் இருக்கும்.

**புதிய காற்றழுத்த தாழ்வு**

இதற்கிடையில், இந்தோ னேசியாவின் சுமத்திரா தீவு மற்றும் அதை ஒட்டியுள்ள தெற்கு அந்தமான் கடல் பகுதி யில் ஒரு மேலடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளது. இது அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு பகுதியாகவும், தொடர்ந்து வரும் 48 மணி நேரத்தில் வலுப்பெற்று, காற்ற ழுத்த தாழ்வு மண்டலமாக வும் மாறும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. அதை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்.

சனிக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி, விருதுநகர், காஞ்சிபுரம் மாவட்டம் கொளப் பாக்கத்தில் அதிகபட்சமாக 8 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

**ஆரோக்கிய காய்கறி விளைவிக்க 25 ஆயிரம் விவசாயிகளுக்கு பயிற்சி; ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு**



கோப்புப்படம்

பூச்சிக் கொல்லி மருந்தால் ஆரோக் கியம் கெடுவதைத் தடுக்கும் விதமாக மாநிலம் முழுவதும் 25 ஆயிரம் விவசாயி களுக்கு, ரூ.5 கோடி மதிப்பில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் இனக்கவர்ச்சி பொறி மற்றும் பயிற்சி வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய வேளாண்மை அபிவிருத் தித் திட்டத்தின் மூலம் பூச்சி தாக்கு தலைக் கட்டுப்படுத்தவும், அதன் இனப்பெருக்கத்தைத் தடுக்கவும் இனக் கவர்ச்சிப் பொறி, விளக்குப் பொறி, வண்ண பசை அட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கென ரூ.4.42 கோடியும், மாநிலம் முழுவதும் 25 ஆயிரம் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்க ரூ.58 லட்சமும் என மொத்தம் ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 43 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பழ மரங்கள், பூ வகைகள், காய்கறி தோட்டங்களில் விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். முதல்கட்டமாக 8,500 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள காய்கறி, பழத் தோட்டங்களுக்கு

இனக்கவர்ச்சிப் பொறி, விளக்குப் பொறி, வண்ண பசை அட்டைப் பொறி வழங்கப்பட உள்ளன.

பயிர்களை அதிக அளவு தாக் கும் காய்ப்புழு, வெள்ளை ஈ, மாவு பூச்சி, அசுவுனி, கூட்டுப் புழு, நீலிபெக் உள்ளிட்டவையால் பயிர் சாகுபடி பாதிப்படைகிறது. இதற்கு பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன் படுத்துவதால், மனித உடல் ஆரோக்கி யம் கெடுகிறது. இந்த இனக்கவர்ச் சிப் பொறியை விவசாயத் தோட்டத் தில் வைக்கும்போது, துளையிடப் பட்ட பாட்டிலில் உள்ள பெண் பூச்சி களின் திரவத்தினால் ஈர்க்கப்படும் ஆண் பூச்சிகள் பொறியில் சிக்கி மடியும். பயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் இப்பூச்சிகளின் இனப்பெருக்கம் இதன் மூலம் கட்டுப்படுத்தப்படும்.

விளக்குப் பொறியை தோட்டத்தில் வைக்கும்போது, ஒளியை நோக்கி வரும் பூச்சிகள், நெருப்பில் விழுந்து மடியும். மஞ்சள் நிற வண்ணப் பசை அட்டை பொறியில் பூச்சிகள் வந்து அமர்ந்ததும், ஒட்டிக்கொள்ளும். இதன் மூலம் பயிர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத் தும் பூச்சிகள் ஒட்டுமொத்தமாக அழியும். ரசாயன கலப்பில்லாத ஆரோக்கிய காய்கறி, பழ வகைகளை விவசாயிகள் சாகுபடி செய்ய, இது ஏதுவாக அமை யும்.

இதுகுறித்து சேலம் தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் பிரபு கூறும்போது: “தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பயிர் பாது காப்பை உறுதி செய்யவும், பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தா மல் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சிப் பொறி வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் ஆரோக்கியமான பழங்களையும், காய்கறிகளையும் பொதுமக்கள் பயன் படுத்த வழி பிறக்கும்” என்றார்.

**திருவள்ளூர் மாவட்டத்தில் தொடர் மழை: குடிநீர் தரும் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு- நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்புள்ளதாக தகவல்**



ஓரளவு தண்ணீருடன் காட்சியளிக்கும் புழல் ஏரி. படம்: பி.ஜோதிராமலிங்கம்

மழை காரணமாக சென்னைக்கு குடிநீர் தரும் ஏரிகளில் நீர் இருப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பூண்டி, சோழவரம், புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகள், சென்னையின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகின்றன. இச்சூழலில், வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் இந்த ஏரிகளின் பெரும்பகுதி வறண்டு காணப்பட்டது. இதனால், பூண்டி உள்ளிட்ட 4 ஏரிகளின் நீர் இருப்பு நாளுக்கு நாள் குறைந்து வந்தன.

அதேநேரத்தில் ஆந்திர அரசு, சென்னை குடிநீர் தேவைக்காக தெலுங்கு கங்கை ஒப்பந்தப்படி கடந்த அக்டோபர் மாதம் முதல் கண்டலேறு அணையிலிருந்து கிருஷ்ணா நதி நீரை திறந்து விடப்பட்டுள்ளது. இடையில் நிறுத்தப்பட்ட அந்த நீர், கண்டலேறு அணையிலிருந்து விநாடிக்கு 1,700 கனஅடி என்ற கணக்கில் திறந்து விடப்பட்டு, தற்போது தடங்கலின்றி பூண்டி ஏரிக்கு வந்து கொண்டிருக்கிறது. நேற்று காலை நிலவரப்படி, விநாடிக்கு 464.74 கனஅடியாக வந்து கொண்டிருக்கிறது. இதனால், கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக பூண்டி ஏரியில் மட்டும் குறைந்த அளவிலான நீர் இருந்து வருகிறது.

இந்நிலையில், தென் கிழக்கு வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் புயலாக மாறி, பிறகு கரையை கடந்ததன் விளைவாக கடந்த 1-ம் தேதி அதிகாலை முதல் திருவள்ளூர் மாவட்டத்தில் மழை பெய்து வருகிறது. லேசான மற்றும் மிதமான

மழையாக மாறி மாறி பெய்து வருவதால் குடிநீர் தரும் முக்கிய ஏரிகளுக்கு நீர்வரத் தொடங்கியுள்ளது. இதனால் புழல் உள்ளிட்ட 4 ஏரிகளிலும் நீர் இருப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இதன்படி 11,057 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட இந்த ஏரிகளில் கடந்த மாதம் 30-ம் தேதி 745 மில்லியன் கனஅடி மட்டுமே நீர் இருப்பு இருந்து வந்தது. இந்நிலையில், நேற்று காலை நிலவரப்படி அது 1,008 மில்லியன் கன அடியாக உயர்ந்துள்ளது. இந்த அளவு இன்னும் படிப்படியாக உயர வாய்ப்புள்ளது என பொதுப்பணித் துறை அதிகா ரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் சென்னையை அச் சுறுத்தி வந்த குடிநீர் தட்டுப்பாடு அபாயம் தற்காலிகமாக நீங்கி யுள்ளது.

**கோயம்பேடு சந்தையில் பாயின்ட் ஆஃப் சேல் இயந்திரங்கள் அதிகரிப்பு: நவீன வர்த்தகத்துக்கு மாறும் காய்கறி வியாபாரிகள்**

கோயம்பேடு சந்தையில் தக்காளி மொத்த வியாபாரியிடம் 'பாயின்ட் ஆஃப் சேல்' இயந்திரத்தில் டெபிட் கார்டு மூலம் பணம் செலுத்தும் சிறு வியாபாரி.

கோயம்பேடு சந்தையில் பாயின்ட் ஆஃப் சேல் இயந்திரம் மூலம் வர்த்தகத்தில் ஈடுபடும் காய்கறி வியாபாரிகள் அதிகரித்து வருகின்றனர்.

கோயம்பேடு காய்கறி சந்தையில் 1900-க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன. இங்கு தினந்தோறும் ரூ.4 கோடி முதல் ரூ.7 கோடி வரை காய்கறிகள் விற்பனை நடைபெறும். ரூ.500, ரூ.1000 நோட்டுகள் செல்லாது என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்ததைத் தொடர்ந்து, சில்லறை நோட்டுகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டதால் மக்களின் வரத்து 80 சதவீதம் வரை குறைந்தது. இதனால் கடந்த 3 வாரங்களாக சந்தை வெறிச்சோடி காணப்பட்டது. அப்போது காய்கறி விலையை குறைத்து விற்றும் வாங்க ஆளில்லை.

இந்நிலையில் தற்போது, மெல்ல மெல்ல வியாபாரம் சூடுபிடித்து வருகிறது. அதற்கு, சில மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் பாயின்ட் ஆஃப் சேல் இயந்திரத்தை பயன்படுத்தத் தொடங்கியுள்ளதும் ஒரு காரணம் என கூறப்படுகிறது.

இது தொடர்பாக கோயம்பேடு மலர், காய், கனி அங்காடி வியாபாரிகள் நலச்சங்க செயலர் எஸ்.எஸ்.முத்துகுமார் கூறியதாவது:



நஷ்டம் அடைந்தாலும் இந்த தொழிலைத்தான் செய்ய வேண்டியுள்ளது. எங்களுக்கு வேறு தொழில் தெரியாது. பிரதமரின் அறிவிப்பால் கோயம்பேடு சந்தையில் கடந்த 3 வாரமாக வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டது உண்மை. அப்போது பொதுமக்களிடம் பழைய நோட்டுகள்தான் இருந்தன. தற்போது புதிய ரூ.2000 நோட்டுகளும், குறைந்த அளவில் ரூ.100, ரூ.50 நோட்டுகளும் புழக்கத்தில் உள்ளன. மேலும் மத்திய அரசு பாயின்ட் ஆஃப் சேல் இயந்திரத்தை பயன்படுத்துமாறு அறிவுறுத்தி வருவதால் சிறு வியாபாரிகள் பலரும், அந்த இயந்திரத்தை வாங்கி பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.

கோயம்பேடு சந்தையில் கடந்த மாதம் வரை 99 சதவீதம் பணப் பரிவர்த்தனைதான் நடைபெற்று வந்தது. மத்திய அரசின் நிர்ப்பந்தத்தாலும், தொழிலை செய்தாக வேண்டும் என்ற அழுத்தம் காரணமாகவும், இங்கு 100-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பாயின்ட் ஆஃப் சேல் இயந்திரத்தை தற்போது வாங்கியுள்ளனர். பலர் விண்ணப்பித்து, இயந்திரத்தின் வருகைக்காக காத்திருக்கின்றனர். இதனால் தற்போது 20 சதவீத

வியாபாரம் அதிகரித்துள்ளது. மத்திய அரசு விரைவாக புதிய ரூ.500 நோட்டுகளை புழக்கத்தில் விட்டால், எங்கள் தொழில் ஓரளவு மேம்படும் என்றார்.

ரூபாய் நோட்டு தட்டுப்பாடு காரணமாக காய்கறி விலை தற்போது குறைந்துள்ளதா என அவரிடம் கேட்டபோது, “நவம்பர் 9 முதல் இரு வாரங்கள் வரை விலை குறைந்ததற்கு அதுதான் காரணம். தற்போது சீசன் என்பதால், காய்கறி அதிகமாக வருகிறது. அதனால் கடந்த ஒரு வாரமாக விலை குறைந்துள்ளது” என்றார்.

தினமணி

**ஆண்டுதோறும்6 ஆயிரம் விவசாயிகளுக்கு மண்வள அட்டை: புதுவைஅமைச்சர்கமலக்கண்ணன்**



புதுச்சேரியில் ஆண்டுதோறும் 6 ஆயிரம் விவசாயிகளின் நிலத்தின் மண்வளம் பரிசோதிக்கப்பட்டு, அவர்களுக்கு மண்வள அட்டை வழங்கப்படும் என்று வேளாண் அமைச்சர் ஆர்.கமலக்கண்ணன்

தெரிவித்தார்.

புதுச்சேரி வேளாண்துறை, வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை மற்றும் ரிலையன்ஸ் அறக்கட்டளை சார்பில் இரண்டாவது ஆண்டாக உலக மண்வள தினவிழா மதகடிப்பட்டு அரசு பழப்பண்ணையில் திங்கள் கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. விழாவில் அமைச்சர் கமலக்கண்ணன் பங்கேற்றுப் பேசியதாவது: இயற்கை வேளாண்மைக்கு வருங்காலத்தில் புதுச்சேரி அரசு முக்கியத்துவம் அளிக்கும். விவசாயிகள் அதிகலாபம் ஈட்டவும், உணவு உற்பத்திக்கும் அரசு உதவி செய்யும். புதுச்சேரியில்17 ஆயிரம் விவசாயிகளும், காரைக்காலில் 10 ஆயிரம் விவசாயிகளும் உள்ளனர். இவர்களில் ஆண்டு தோறும் 6 ஆயிரம் பேரின் நிலத்தின் மண்வளம் பரிசோதிக்கப்பட்டு மண்வள அட்டை வழங்கப்படும். இதன்மூலம் விவசாயிகள் தங்களது நிலத்தில் எந்த மாதிரியான பயிரை பயிரிட முடியும் என்ற உறுதியை அரசு அளிக்கும் என்றார். வேளாண்செயலர்மணிகண்டன்,

கோபிகாஎம்.எல்.ஏ.,வேளாண்துறைஇயக்குனர்இராமமூர்த்தி,

கூடுதல்வேளாண்இயக்குநர்ரவிப்பிரகாசம், அலுவலகஅதிகாரிகள், களப்பணியாளர்கள், ஆத்மாதிட்டதொழில்நுட்பமேலாளர்கள், ஊழியர்கள்உள்படபலர்கலந்துகொண்டனர்.

சிறுதானியவிவசாயிகளுக்கு3 மாதசான்றிதழ்பயிற்சிவகுப்பு



உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர்களுக்கான 3 மாத சான்றிதழ் பயிற்சி வகுப்பு திங்கள்கிழமை தொடங்கியது.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசியவங்கி (நபார்டு) ஊரக வளர்ச்சிக்கான வங்கியாளர்கள் நிறுவனம் உள்ளிட்டவற்றுடன் இணைந்து இந்த பயிற்சி வகுப்பை தானம் அறக்கட்டளை நடத்த உள்ளது. சிறுதானியம் பயிரிடும் விவசாயிகளுக்கு மேலாண்மை மற்றும் வியாபார நுணுக்கங்கள் இப்பயிற்சியில் கற்றுத்தரப்பட உள்ளதாக டாடா-தானம் அறக்கட்டளையின் இயக்குநர் ஏ.குருநாதன் கூறினார். நபார்டு

சென்னை மண்டல இணை பொது மேலாளர் ஏ.அர்த்தநாரீஸ்வரன், ஊரக வளர்ச்சிக்கான வங்கியாளர்கள் நிறுவன நிர்வாகி எம்.ஆர்.கோபால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.